பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

05 06 2024 7 15
புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்-

1. பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி மக்களவைத் தேர்தலில் பெரும்பான்மை பெற்றுள்ள நிலையில் அந்த கூட்டணிக் கட்சித் தலைவர்களின் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறுகிறது.
2. எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி கட்சிகளின் கூட்டத்திற்கும் இன்று அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.
3. ஆந்திர மாநிலத்தில் தெலுங்கு தேசம் கட்சியும், ஒடிஸாவில் பிஜேபி-யும் ஆட்சியை கைப்பற்றியுள்ளன.
4. தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெற்றிருப்பதற்கு இலங்கை அதிபர் திரு ரணில் விக்ரமசிங்கே வாழ்த்து தெரிவித்துள்ளார்.
5. உலகக்கோப்பை டுவெடிண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

----- இனி விரிவான செய்திகள் ---

[]<<<>>>[]

மக்களவைத் தேர்தல் வெற்றியையடுத்து தேசிய ஜனநாயகக் கூட்டணி கட்சிகளின் ஆலோசனைக் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுகிறது.

இந்த கூட்டத்தில் கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்கின்றனர்.

புதிய அரசு அமைப்பது குறித்து இந்த கூட்டத்தில் முக்கிய முடிவு எடுக்கப்படும் என தெரிகிறது.

--------

இதனிடையே எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி கட்சிகளின் கூட்டமும் இன்று புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து இந்த கூட்டத்தில் ஆலோசிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

[]<<<>>>[]

பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையில் மத்திய அமைச்சரவைக் கூட்டம் இன்று புதுதில்லியில் நடைபெறவுள்ளது.

இந்த கூட்டத்தில் மத்திய அமைச்சர்கள் பங்கேற்கின்றனர்.

**[]<<<>>>[]**

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அறுதிப்பெரும்பான்மை பெற்று மீண்டும் ஆட்சி அமைக்கவுள்ளது.

மொத்தம் உள்ள 543 தொகுதிகளில் 542 தொகுதிகளுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் தேசிய ஜனநாயகக் கூட்டணி 292 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

பிஜேபி தனித்து 240 தொகுதிகளில் வெற்றிபெற்று தனிப்பெரும் கட்சியாக உருவெடுத்துள்ளது.

பிஜேபி கூட்டணியில் இடம்பெற்றுள்ள

தெலுங்கு தேசம் கட்சி 16 இடங்களையும்

ஐக்கிய ஜனதாதளம் 12 தொகுதிகளையும் கைப்பற்றியுள்ளன.

ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா ஏழு தொகுதிகளிலும்,

லோக் ஜனசக்தி ஐந்து தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

**[]<<<>>>[]**

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணி 233 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

காங்கிரஸ் கட்சி 99 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

இந்த கூட்டணியில் இடம்பெற்றுள்ள சமாஜ்வாதி கட்சி 37 தொகுதிகளிலும்,

திரிணமூல் காங்கிரஸ் 29 தொகுதிகளிலும்

திமுக 22 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

சிவசேனா உத்தவ் தாக்ரே அணி ஒன்பது தொகுதிகளை கைப்பற்றியுள்ளது.

தேசியவாத காங்கிரஸ் கட்சி எட்டு தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளது.

**[]<<<>>>[]**

பிரதமர் திரு நரேந்திரமோடி உத்திரபிரதேச மாநிலம் வாரணாசி தொகுதியில் வெற்றிபெற்றுள்ளார்.

மத்திய அமைச்சர்கள் திரு அமித்ஷா, திரு ராஜ்நாத்சிங், திரு அர்ஜுன்ராம் மெக்வால், திரு கஜேந்திரசிங் ஷெகாவத், திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, திரு அனுராக் தாக்கூர், திரு கிரண் ரிஜிஜூ, மக்களவைத் தலைவர் திரு ஓம் பிர்லா, ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

மத்திய அமைச்சர்கள் திருமதி ஸ்மிருதி இராணி, திரு அர்ஜுன் முண்டா மற்றும் திருமதி மேனகாகாந்தி ஆகியோர் வெற்றிவாய்ப்பை இழந்தனர்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு ராகுல்காந்தி தாம் போட்டியிட்ட வயநாடு மற்றும் ரேபரெய்லி தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளார்.

[]<<<>>>[]

உத்திரபிரதேசத்தில் மொத்தம் உள்ள 80 தொகுதிகளில் சமாஜ்வாதி கட்சி 37 தொகுதிகளிலும், பிஜேபி 33 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

சமாஜ்வாதி கட்சித் தலைவர் திரு அகிலேஷ் யாதவ் கண்ணோஜ் தொகுதியில் வெற்றிபெற்றார்.

பீகாரில் மொத்தம் உள்ள 40 தொகுதிகளில் பிஜேபி மற்றும் ஐக்கிய ஜனதாதளம் தலா 12 தொகுதிகளில் வெற்றிபெற்றது.

லோக் ஜனசக்தி ஐந்து தொகுதிகளிலும், ராஷ்ட்ரீய ஜனதாதள் நான்கு தொகுதிகளிலும், காங்கிரஸ் மூன்று தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

தலைநகர் தில்லியில் உள்ள ஏழு தொகுதிகளையும் பிஜேபி கைப்பற்றியுள்ளது.

பஞ்சாப் மாநிலத்தில் மொத்தம் உள்ள 13 தொகுதிகளில் காங்கிரஸ் ஏழு தொகுதிகளிலும், ஆம் ஆத்மி மூன்று தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

ஹரியானா மாநிலத்தில் ஐந்து தொகுதிகளில் பிஜேபி-யும், ஐந்து தொகுதிகளில் காங்கிரஸும் வெற்றிபெற்றுள்ளன.

ஜம்மு-கஷ்மீரில் உள்ள ஐந்து தொகுதிகளில் பிஜேபி மற்றும் தேசிய மாநாட்டுக் கட்சி தலா இரண்டு தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளன. ஒரு தொகுதியில் சுயேச்சை வேட்பாளர் வெற்றிபெற்றார்.

முன்னாள் முதலமைச்சர் திரு ஓமர் அப்துல்லா பாரமுல்லா தொகுதியிலும், மக்கள் ஜனநாயகக் கட்சித் தலைவர் திருமதி மெஹபூபா முப்தி அனந்தநாக்-ரஜோரி தொகுதியிலும் வெற்றிவாய்ப்பை இழந்தனர்.

இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் அனைத்து தொகுதிகளிலும் பிஜேபி வெற்றிபெற்றுள்ளது.

ராஜஸ்தானில் உள்ள 25 தொகுதிகளில் பிஜேபி 14 இடங்களையும், காங்கிரஸ் எட்டு இடங்களையும் பிடித்துள்ளன. முார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், ராஷ்ட்ரீய லோக் தந்த்ரிக், பாரத் ஆதிவாசி கட்சி ஆகியன தலா ஒரு தொகுதியில் வெற்றிபெற்றுள்ளன.

குஜராத் மாநித்தில் மொத்தம் உள்ள 26 தொகுதிகளில் 25-ல் பிஜேபி வெற்றிபெற்றுள்ளது. காங்கிரஸ் ஒரு தொகுதியை கைப்பற்றியுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலத்தில் மொத்தம் உள்ள 48 தொகுதிகளில் பிஜேபி ஒன்பது இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

காங்கிரஸ் 13 தொகுதிகளிலும், சிவசேனா உத்தவ் தாக்ரே அணி ஒன்பது தொகுதிகளிலும், ஏக்நாத் ஷிண்டே தலைமையிலான சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் பிரிவும் தலா ஏழு தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளன.

சத்திஷ்கர் மாநிலத்தில் மொத்தம் உள்ள 11 தொகுதிகளில் பத்து இடங்களை பிஜேபி கைப்பற்றியுள்ளது. ஒரு இடத்தில் காங்கிரஸ் வெற்றிபெற்றது.

ஒடிஸா மாநிலத்தில் மொத்தம் உள்ள 21 தொகுதிகளில் 20 தொகுதிகளில் பிஜேபி-யும், ஒரு இடத்தில் காங்கிரஸும் வெற்றிபெற்றுள்ளன.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் 14 தொகுதிகளில் பிஜேபி எட்டு இடங்களை கைப்பற்றியுள்ளது. ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா மூன்று தொகுதிகளிலும், காங்கிரஸ் இரண்டு தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

மேற்குவங்க மாநிலத்தில் மொத்தம் உள்ள 42 தொகுதிகளில் திரிணமூல் காங்கிரஸ் 29 தொகுதிகளிலும், பிஜேபி 12 தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன. காங்கிரஸ் ஒரு தொகுதியை கைப்பற்றியுள்ளது.

தெலங்கானாவில் மொத்தம் உள்ள 17 தொகுதிகளில் பிஜேபி-யும், காங்கிரஸும் தலா எட்டு தொகுதிகளில் வெற்றிபெற்றுள்ளன.

கேரளா மாநிலத்தில் உள்ள 20 தொகுதிகளில் 18-ல் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி வெற்றிபெற்றுள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தொகுதியில் மட்டுமே வென்றுள்ளது. கேரளாவில் முதல் முறையாக பிஜேபி ஒரு தொகுதியில் வெற்றிபெற்றுள்ளது. திருச்சூர் மக்களவைத் தொகுதியில் பிஜேபி சார்பில் போட்டியிட்ட நடிகர் சுரேஷ்கோபி வெற்றிபெற்றார்.

கர்நாடக மாநிலத்தில் மொத்தம் உள்ள 28 தொகுதிகளில் 17 இடங்களில் பிஜேபி-யும், காங்கிரஸ் ஒன்பது இடங்களிலும், மதசார்பற்ற ஜனதாதளம் இரண்டு இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

[]<<<>>>[]

தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 39 தொகுதிகளையும் திமுக தலைமையிலான கூட்டணி கைப்பற்றியுள்ளது.

திமுக 22 இடங்களிலும், காங்கிரஸ் ஒன்பது தொகுதிகளிலும், விடுதலை சிறுத்தைகள், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிகள் தலா இரண்டு இடங்களிலும் வெற்றிபெற்றுள்ளன.

மதிமுக, இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சிகள் தலா ஒரு இடத்தில் வெற்றிபெற்றுள்ளன.

புதுச்சேரியில் திமுக கூட்டணியில் போட்டியிட்ட காங்கிரஸ் வெற்றிபெற்றுள்ளது.

[]<<<>>>[]

ஆந்திர மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் தெலுங்கு தேசம் கட்சி ஆட்சியை கைப்பற்றியுள்ளது.

175 தொகுதிகளைக் கொண்ட ஆந்திர சட்டப்பேரவையில் தெலுங்கு தேசம் 135 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது..

இந்த கட்சியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்ட ஜனசேனா 21 தொகுதிகளிலும், பிஜேபி எட்டு தொகுதிகளிலும் வெற்றிபெற்றுள்ளன.

அங்கு ஆட்சியில் இருந்த ஒய் எஸ் ஆர் காங்கிரஸ் கட்சி 11 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்று தோல்வியடைந்துள்ளது.

[]<<<>>>[]

ஒடிஸா மாநில சட்டப்பேரவைக்கு நடைபெற்ற தேர்தலில் மொத்தம் உள்ள 147 தொகுதிகளில் பிஜேபி 78 இடங்களை கைப்பற்றி ஆட்சியை பிடித்துள்ளது.

இம்மாநிலத்தில் முதல் முறையாக பிஜேபி ஆட்சியமைக்கவுள்ளது.

அங்கு ஆட்சியில் இருந்த பிஜூ ஜனதாதள் 51 தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெற்றுள்ளது. காங்கிரஸ் கட்சி 14 இடங்களில் வெற்றிபெற்றுள்ளது.

[]<<<>>>[]

பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயக் கூட்டணி தொடர்ந்து மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்க இருப்பது இந்திய வரலாற்றில் குறிப்பிடத்தக்க தருணம் என்று பிரதமர் திரு நரேந்திரமோடி பெருமிதம் தெரிவித்துள்ளார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றிபெற்றதை அடுத்து தில்லியில் உள்ள பிஜேபி தலைமை அலுவலகத்திற்கு நேற்று இரவு வந்த திரு நரேந்திரமோடிக்கு கட்சித்தொண்டர்களும், நிர்வாகிகளும் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டா, மத்திய அமைச்சர்கள் உள்ளிட்டோர் பிரதமருக்கு மலர்கொத்து வழங்கினர்.

அங்கு திரண்டிருந்த பிஜேபி தொண்டர்களிடையே உரையாற்றிய திரு நரேந்திரமோடி, இந்த வெற்றிக்காக பாடுபட்ட கட்சியின் அனைத்து தொண்டர்களுக்கும் தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகக் கூறினார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி மீது மக்கள் நம்பிக்கை வைத்து மூன்றாவது முறையாக வாய்ப்பு அளித்திருப்பதற்கு தாம் தலைவணங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த நேரத்தில் நாட்டு மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கு தாம் உறுதியேற்பதாகவும், புதிய உத்வேகத்துடனும், ஆற்றலுடனும் தாம் தொடர்ந்து பணியாற்ற இருப்பதாகவும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

இந்த வெற்றி ஜனநாயகத்திற்கு கிடைத்த வெற்றி என்று குறிப்பிட்ட அவர், கடந்த பத்து ஆண்டுகளாக செய்த பணிகளை தொடர்ந்து நிறைவேற்ற இருப்பதாகக் குறிப்பிட்டார்.

மக்களவைத் தேர்தலை சிறப்பாக நடத்தி முடித்த தேர்தல் ஆணையத்துக்கு திரு நரேந்திரமோடி பாராட்டு தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில், மக்கள் அளித்த தீர்ப்பினை ஏற்றுக் கொள்வதாக காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கூறியுள்ளார்.

நேற்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதி பெரும்பான்மை கிடைக்காததை சுட்டிக்காட்டினார்.

தங்கள் கூட்டணிக்கு வாக்களித்தவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும் திரு. மல்லிகார்ஜுன கார்கே தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

குடியரசுத் தலைவர் மாளிகையை பொதுமக்கள் பார்வையிடுவதற்கு இன்று முதல் வரும் ஒன்பதாம் தேதிவரை அனுமதி கிடையாது என்று குடியரசுத் தலைவர் மாளிகை தெரிவித்துள்ளது.

புதிய அமைச்சரவை பதவியேற்பு விழாவிற்கான ஏற்பாடுகளை கருத்தில் கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக குடியரசு மாளிகையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

**[]<<<>>>[]**

மக்களவைத் தேர்தலில் பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி பெற்றுள்ள வெற்றிக்கு இலங்கை அதிபர் திரு ரணில் விக்ரம சிங்கே வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் தமது சமூக வலைதளப்பதிவில் பிரதமர் திரு நரேந்திரமோடி தலைமையின் கீழ் இந்திய மக்களுக்கு வளர்ச்சி ஏற்படக்கூடிய வகையில் இந்த வெற்றி அமைந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அண்டை நாடான இந்தியாவுடனான இலங்கையின் நல்லுறவு தொடர்ந்து வலுப்பெறுவதை தாம் எதிர்நோக்கி இருப்பதாகவும் திரு ரணில் விக்ரம சிங்கே கூறியுள்ளார்.

**[]<<<>>>[]**

உலக சுற்றுச்சூழல் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**[]<<<>>>[]**

உலகக்கோப்பை டுவெண்டி — டுவெண்டி கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று அயர்லாந்தை எதிர்கொள்கிறது.

நியூயார்க்கில் இப்போட்டி இரவு எட்டு மணிக்கு தொடங்குகிறது.

நேற்று நடைபெற்ற ஒரு போட்டியில் நெதர்லாந்து அணி — நேபாளத்தை ஆறு விக்கெட் வித்தியாசத்தில் வென்றது.

**[]<<<>>>[]**

பாரீஸில் நடைபெற்று வரும் ப்ரெஞ்ச் ஓப்பன் போட்டிகளிலிருந்து முன்னணி வீரர் நோவக் ஜோக்கோவிச் காயம் காரணமாக விலகியுள்ளார்,